கிளிநொச்சி மாவட்ட நிறுவனங்களுடனான ஊடாட்டம்.

# மகுடம்

மாத இதழ் 2022

## வரலாறு

அறிமுகம்
பணிகள்
பணியாளர்கள்
பயனாளிகளின் பின்னூட்டல்



# மகாசக்தி மகளிர் சம்மேளனம்

mahasakthywf@gmail.com

077 641 66 51

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் - கிளிநொச்சி

# உள்ளடக்கம்


- ❖ முன்னுரை
- ❖ ஆசிச்செய்தி
- ❖ அறிமுகம்
- ❖ வரலாறு – ஆரம்பம் - வளர்ச்சி
- ❖ நிர்வாகக் கட்டமைப்பு
- ❖ பணிகள்
- ❖ பணியாளர்கள்
- ❖ பயனாளிகளின் அறிமுகமும் பின்னூட்டலும்
- ❖ நன்றியுரை

# முன்னுரை

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினூடாக முன்னெடுத்து செயற்படுத்தப்படும் மகுடம் இதழ் வெளியீடானது ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளியிட இருப்பது ஒரு சிறந்த செயற்பாடாகும். இச் செயற்பாடு தொடர்ந்து வரும் மாதாங்கள் தோறும் ஏனைய நிறுவனங்களின் ஊடாட்டத்தினூடாக வெளிவர இருக்கிறது. அவ்வகையில் மாதமொரு மகுடம் இதழ் வெளியீட்டிற்காக முதலில் மகாசக்தி மகளீர் சம்மேளனமானது தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மகாசக்தி மகளீர் சம்மேளன அமைப்பானது பெண்களை மையப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காகவேதோற்றுவிக்கப்பட்டதாகும்.சமுக,பொருளாதார,அரசியல்,ரீதியாகபெண்களை வலுப்படுத்தி அவர்களின் சுய சேமிப்பில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் மகாசக்தி மகளீர் சம்மேளன அமைப்பினது பிரதான நோக்கமாகும்.

தற்துணிவோடு இயங்கும் நிறுவனங்கள் தொடர்ந்து தமது செயற்பாடுகளை வெளிக்கொண்டு வருவதற்கு மாதமொரு மகுடம் இதழ் வெளியீட்டனை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

என்றும் சேவையில்,

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,

கிளிநொச்சி.

# வாழ்த்துச்செய்தி

காலம் ஒரு திசைக்காக காத்திருந்தது
அந்த திசை வெளித்த போது காலம் உருண்டோடத் தொடங்கியது.
'வெள்ளி பூக்களின்' சின்ன சின்ன கால்கள் முளைத்து
அங்குமிங்கும் மெதுவாக நடக்க தொடங்கிய பின்
ஒட்டிக்கிடந்த பஞ்சு பூக்களை காற்று தட்டியெழுப்பிய பின்
வெள்ளி பூக்கள் கண்சிமிட்டி காலத்தை வரவேற்கத் தொடங்கியது.
அந்த காலத்தின் நாயகிகள் வேறு யாருமல்ல!
அது இந்த வெள்ளிப் பூக்கள் தான்,
தாமே எழுந்து, தாமே நடந்து, தாமே கால் ஊன்றி
நிமிர்ந்து கண்சிமிட்டி இருட்டை துரத்தி ஒளியை சிந்தும்
இந்த சின்னஞ்சிறு வெள்ளி பூக்கள் வேருயாருமல்ல!
அவர்கள் தான் இந்த மகா சக்தியெனும்
ஓர் சூரிய கூட்டில் பொறித்த குஞ்சுகள்.
வாழ்க்கை வட்டத்தின் வளையாத இரும்பு வளையங்கள்,
தீமையை தின்று நன்மை பிரசவிக்கும் மகா சக்தியின் குழந்தைகள்...
இந்த சக்தி குழந்தைகள் தாம் நடந்த பாதையெங்கும்
சிந்திய வெளிச்சத்தின் பொங்கி,
பிரசவித்து ஊருக்குள் ஓடிய போது தான்
அழும் பெண்கள் துணிவுடன் எழுந்து நேர்முகம் காட்டி
விழியில் ஒளியை கக்கி வழியின் தடைகளை உடைத்து,
சுற்றிகிடந்த வேலிகளை 'பட்டென' அற
பார்வைக் கொழுவியை அங்குமிங்கும்
அகற்றி திருப்பிவிட, அடுப்பு மெதுவாக புகையத் தொடங்கியது,
பானை மெதுவாக கொதிக்க தொடங்கியது,
அரிசி கொஞ்சம் அவியத் தொடங்கியது,
பிஞ்சுகள் மெல்ல சிரிக்க தொடங்கினர்,
மகா சக்தி உருவெடுத்தது மாதவம் செய்து
மண்ணில் விடாய்த்து நீருக்காய் காத்திருந்த பாலைவனத்திற்குள்
ஊடுருவி பாயத்தொடங்கிய போது தான்
வன்னி மண் மெதுவாக சிரித்து, செலித்து எழத்தொடங்கினாள்,
மகா சக்தியின் வெள்ளி பூக்களின் இதழ்களின் நடுவில்
ஆயிரம் விதைகள் அங்கும் இங்கும் விழத்தொடங்கி
நீரூற்றில் நீந்தி மண்ணில் வேர் விட

ஆயிரம் செடிகள்,கொடிகள,சோலைவனம் ,பாலைவனத்தில் ஊடறுத்து நிமிர்ந்து எழுந்தது. இத்தனையும் மகாசக்தியெனும் மாபெரும் ஒளியும் அது வழியாகி,நதியாகி பூவாகி, விதையாகி, விருட்சமாகி பாலைவனத்தில் சோலைவனமாய் மாற்றிய கதையின்

ஓர் சிறு துளி சிந்திய வெளிச்சத்தில் முளைத்தவை…..

பகிர்வு

உங்கள் பணியாளன்.

# அறிமுகம்

மகாசக்தி மகளிர் சம்மேளனமானது கிளிநொச்சி மாவட்டத்தில் விவேகானந்தநகர் கிராமத்தில் A9 வீதிக்கு 500m தொலைவில் மேற்கு திசையில் அமைந்துள்ளது. இவ்வமைப்பானது சமூக,பொருளாதார,அரசியல் ரீதியாக பெண்களை வலுப்படுத்தி அவர்களின் சுயசேமிப்பில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி சுய முயற்சியினால் வாழ வழிவகுப்பதை நோக்கமாக கொண்ட அமைப்பாக இயங்கி வருகின்றது.

கிளிநொச்சிமாவட்டத்தில்கரைச்சி,கண்டாவளை,பூநகரி,பளை ஆகிய பிரதேச செயலக பிவுகளில் பணிபுரிந்து வருகின்றது. 29 பணியாளர்களுடன் தமது வேலைத்திட்டத்தினை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.

இவ் நிறுவனத்திற்கு SLCDF நிறுவனம் நிதி வழங்கி வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. சுய சேமிப்பு குழுக்களை உருவாக்கி அதன்மூலம் இயற்கை,யுத்தம் மற்றும் மனித காரணிகளால் இலகுவில் பாதிப்படைய கூடிய பெண்கள்,சிறுவர்கள் மற்றும் விசேட தேவைக்குள்ளானவர்கள் சுய கௌரவத்துடனும் தன்னம்பிக்கையுடனும் சமூக பொருளாதார,அரசியல் உரிமை ரீதியாக நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு வலுவூட்டப்பட்டு சிறந்த சமுதாயத்தை உருவாக்குதலை குறிக்கோளாக கொண்டுள்ளது.

# வரலாறு

மகாசக்தி மகளிர் சம்மேளனமானது 2002ம் ஆண்டு 20 பேர் கொண்ட C.L.A (கொத்தணி) அமைப்பாக ஆரம்பிக்கப்பட்டது. KHN நிறுவனத்தால் 10 அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டது. அப் பயிற்சியினை பெற்றவர்கள் கிராம ரீதியாக சுய சேமிப்புக் குழுக்கள் உருவாக்கி அவர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2006ம் ஆண்டு மகாசக்தி மகளிர் சம்மேளனம் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு குழுவிலிருந்தும் 3 பேர் தெரிவு செய்யப்பட்டு கிராம ரீதியாக கொத்தணிகள் உருவாக்கப்பட்டது. கொத்தணிகளிலிருந்து 3 பேர் தெரிவு செய்யப்பட்டு மகாசக்தி மகளிர் சம்மேளனம் உருவாக்கப்பட்டது.

2008ம் ஆண்டு யுத்தத்திற்கு முன்னர் 10 கொத்தணி இயங்கி வந்தன. அதற்கு பின்னர் 06 கொத்தணி குழுக்கள் இயங்கி வருகின்றன. 2020ம் ஆண்டு மொத்த சேமிப்பாக 4 கோடியே 75 லட்சம் ரூபா பணம் சேமிக்கப்பட்டது. இதன் பின்னர் சம்மேளனத்திற்கென யாப்பு உருவாக்கப்பட்டது

மகாசக்தி மகளிர் சம்மேளனத்தினது நோக்கமானது சமூக,பொருளாதார,அரசியல் ரீதியாக பெண்களை வலுப்படுத்தி அவர்களின் சுயசேமிப்பின் மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி சுய முயற்சியினால் வாழ வழி வகுத்தலாகும்.

மகாசக்தி மகளிர் சம்மேளனத்தின் குறிக்கோளானது இலங்கை யுத்தம் மற்றும் மனித காரணிகளால் இலகுவில் பாதிபடைய கூடிய பெண்கள்,சிறுவர்கள் மற்றும் விசேட தேவைக்குள்ளானவர்கள் சுய கௌரவத்துடனும் தன்னம்பிக்கையுடனும் சமூக பொருளாதார ரீதியாக நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு வலுவூட்டப்பட்டு சிறந்த சமுதாயத்தை உருவாக்குதலாகும்.

# பணிகள்

மகாசக்தி மகளிர் சம்மேளனத்தின் பணிகள் சுயசேமிப்பு குழுக்களை உருவாக்கி சமூக பொருளாதார அரசியல் ரீதியாக பெண்களை வலுப்படுத்தி அவர்களின் சுயசேமிப்பில் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி சுயமுயற்சியினால் வாழ வழி வகுத்தல் மற்றும் இடர்காலத்தில் நிவாரண உதவிகளை பிறரிடமிருந்து பெற்றுக் கொடுத்தல், மேலும் வாழ்வாதார திட்டங்களை செயன்முறைப்படுத்தும் போது மாடு வளர்ப்பு, வீட்டுத்தோட்டம,கிணறு கட்டிக்கொடுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வாழ்வாதார ரீதியாக மக்களை உயர்த்துவதும் மகாசக்தியின் பணியாகும்

பெண்களின் சிறு குழுக்களின் சேமிப்பின் மூலம் சிறுவர்களது கல்வி,மருத்துவம்,ஆரோக்கியமான உணவு போன்ற தேவைகளை சுயமாக தாமாகவே பெற்றுக்கொளளக் கூடிய வசதியை ஏற்படுத்துவம் எமது பணியின் நோக்கமாகும்.

பெண்கள்,சிறுவர்களுக்கெதிராக நடைபெறும் வன்முறைகளை குறைப்பதற்காக கிராம ரீதியாக விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருவதுடன், பெண்களுக்கெதிராக வன்முறை ஏற்படுகின்ற போது சம்பந்தப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

பயனாளிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக அரச,அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பரிந்துரை செய்தல் மற்றும் உதவிகளை பெற்றுக் கொடுத்தல்.

- **செய்து முடிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்**
  - கால்நடை வளர்ப்பு, வீட்டுத்தோட்டம் (2013-2015
  - மலசல கூடம்
  - கிணறு
- **நடைமுறையில் இருப்பவை**
  - சுயசேமிப்பு குழுக்களை உருவாக்குதல்
  - இலங்கையில் பாலின வன்முறையை இல்லாதொழித்தல் திட்டத்தின் கீழ் பெண்களுக்கெதிராக வன்முறை நடக்கும் போது உடனடி அவசர உதவிகளை வழங்கி பரிந்துரைகள் செய்தல்.
- **நடைமுறைப்படுத்த திட்டமிட்டிருப்பவை**
  - பூநகரி பிரதேச செயலக பிரிவுகளில் கொத்தணி குழுக்களை உருவாக்கல்
  - கிளை சம்மேளனங்களை உருவாக்குதல்

# நிர்வாக கட்டமைப்பு

**நிர்வாகம்**

↓

**மதியுரை குழு – திருமதி ச.லலிதகுமாரி**

↓

**செயலாளர்**

திருமதி ம.மோகனகாந்தி

**தலைவி**

திருமதி சி. மலர்ச்செல்வி

**பொருளாளர்**

திருமதி அ. ஜெஸ்மின்

**உப செயலாளர்**

திருமதி க.சாந்தா

**உப தலைவி**

திருமதி சு. தனபாக்கியம்

↓

**உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திருமதி. இ.நாகலட்சுமி | திருமதி. ம.தேன்மொழி |
| திருமதி. அ.சுசிலாதேவி | திருமதி. க.இராஜேஸ்வரி |
| திருமதி. அ.நாகலட்சுமி | திருமதி. ம.மகேஸ்வரி |
| திருமதி. சி.சத்தியபிரியா | திருமதி. சு.தனேஸ்வரி |
| திருமதி. வி. திஜெயலக்ஸ்மி | திருமதி. ம.கலாமேரி |

<u>**பணியாளர்கள்**</u>

மகாசக்தி மகளிர் சம்மேளனமானத்தில் மூன்று திட்டத்தின் கீழ் 29 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

∗ **பல்மேரா திட்டம் (2020) – 18 பணியாளர்கள்**

- **SHG இணைப்பாளர்** - திருமதி. ரா.பிரதீபா
- **நிர்வாக உத்தியோகத்தர்** -திருமதி.சு.மொனிக்கா ஷர்மிளா
- **சமூக இலகுபடுத்துனர்**

திருமதி.அ.சிவகௌரி, திருமதி.ஜெ.அருட்செல்வி
திருமதி.பி.உசாஜினி, திருமதி.அ.காணிக்கைமலர்,
செல்வி.அ.மேரி டிலக்சனா, செல்வி.ச.பிரியங்கா,
செல்வி.ஜோ.மரியறொமின்ரில்டா, திருமதி.ஜெ.ஜெமில்டா
திருமதி.அ.மரியரோகினி, திருமதி.சு.சகாயமேரி
திருமதி.டி.லோஜிதா, திருமதி.அ.அஸ்ரா,
திருமதி.சு.சுதாஜினி, திருமதி.க.தர்சினி,
திருமதி.ரா.துஸ்யந்தினி, திருமதி.பு.சுமின்

∗ **KHN LIFT (2021) – 08 பணியாளர்கள்**

- **திட்டஉதவியாளர்**-திருமதி.ச.சுபதர்சினி, திருமதி.ஜெ.டர்ஷா
- **சமூகஇலகுபடுத்துனர்**-திருமதி.ஜெ.ஜெமிலா, திருமதி.பா.கோபிகா, திருமதி.செ.மனோன்மணி, திருமதி.சி.ராஜவதனி, திருமதி.க.சசிமாலா, திருமதி கு.சுமீனா

∗ **GAC (2021) - 03 பணியாளர்கள்**

- **கள உத்தியோகத்தர்** - திருமதி.சி.சுகந்தினி
- **சமூகஇலகுபடுத்துனர்**-திருமதி.சி.நிகிலா, திருமதி.ச.பவானி

- **3228** பயனாளிகளை உள்ளடக்கிய **223** குழுக்கள் இயங்கி வருகின்றது.

# பயனாளிகளின் அறிமுகமும் பின்னூட்டலும்

➢ **திருமதி க.இராஜேஸ்வரி** அவர்களின் பின்னூட்டல்

(வைகைநதி கொத்தணி – பூந்தளிர் குழு)

எமது மகாசக்தி குழுவானது 2001ம் ஆண்டு கோணாவில் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இலை மறை காயாக எம் பெண்ணினத்தினை மார்தட்டி விடியலை நோக்கிய பயணத்தில் உந்துசக்கியாக அமைந்தது இம் மகாசக்தி அமைப்பே என பெருமைப்படலாம்.

வீட்டுப்பணிகளிலே மூழ்கிக் கிடந்த பெண்களை சமூகமயமாக்கி சேமிப்பினை ஊக்குவித்தல் விழிப்புணர் செயற்பாடுகள் போன்ற பல செயற்பாடுகளிலேயே தம்மை ஈடுபடுத்திக் நகர்த்தி சென்ற அமைப்பென்றே கூறலாம்

சிறுகுழுக்களாக பெண்களை பர்ணமித்து கிராமச் செயற்பாடுகளிலேயே மும்முரமாக ஈடுபட்டதிலிருந்து தெரிய வருகின்றது இம் அமைப்பின் செயற்பாடுகள். சிறு குழுக்கள் இணைந்து சிரமதான பணிகள், போதைவஸ்திற்கு எதிரான வன்முறைகளை தகர்த்தெரிவதற்கான போராட்டங்கள்,கருத்தரங்குகள் போன்றவறில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றனர்.

சுயமாக சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்து அதன் மூலம் வருமானங்கள் பெற்று தமது குடும்பத்தை கொண்டு நடத்தக்கூடியவர்கள் இவர்கள் மகாசக்தி சம்மேளனத்தினை உருவாக்கி மகளிர்களுக்கான அனைத்து செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக அமைவது இச்சம்மேளனமே. மகாசக்தியின் அனைத்துச் செயற்பாடுகளும் வெற்றிகரமாக செயற்பட வாழ்த்துக்கள் பல கோடி.

நன்றி

➢ **திருமதி மனோன்மணி** அவர்களின் பின்னூட்டல்

(ஊற்றருவி கொத்தணி – கலைமகள் குழு)

மகாசக்தி சம்மேளத்தினால் கடந்த 2004ம் ஆண்டிலிருந்து சிரு குழுக்களின் சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எமது ஊற்றருவி கொத்தணியின் கீழ் 14 சிறு சேமிப்பு குழுக்கள் இயங்கி வருகின்றன. இச் சேமிப்புக் குழுக்களிலில் இணைந்து கொண்டு வறுமையான பெண்கள் சிறுகச் சிறுக சேமிக்கத் தொடங்கினார்கள். விடாமுயற்சியுடன் சேமிக்கப்பட்ட இச் சிறு தொகைப் பணமானது இன்று சறு குழுக்களில் சிறு துளி பெரு வெள்ளமாக மாறி ஊற்றெடுத்து பாய்கின்றது. ஒவ்வொரு சிறு குழுக்களும் 50000.00 ற்கும் மேற்பட்ட கடன் தொகையினை ஒவ்வொரு குழு உறுப்பினர்களிற்கும் வழங்கக் கூடிய வகையில் வளர்ச்சியடைந்துள்ளமை பாராட்டத்தக்கது.

மேற்படி 14 சிறு சேமிப்பு குழுக்களையும் ஒன்றினைத்து உருவாக்கப்பட்டதே எமது ஊற்றருவி கொத்தணியாகும். குழுக்களில் இணைந்திருந்த 325 பெண்களையும் தன்னகத்தே கொண்டு அப்பெண்களின் எதிர்காலப் பயனுக்காக ஊற்றெடுத்துபாயும் ஒரு கொத்தணியாக திகழ்கின்றது. இக் கொத்தணியின் கீழ் பெண் தலைமைத்துவம், மாற்றுத்திறனாளிகள் போன்ற பெண்கள் அணியினர் பயன் பெற்று வருகின்றனர்.

சிறு குழுக்களின் முன்னேற்றங்கள் பின்னடைவுகளை இக் கொத்தணியானது கண்காணித்து வருகின்றது பொது நிகழ்வுகள், பொதுப்பணிகள்,தனிப்பட்ட நன்மைகள், தீமைகள் போன்ற வைபவங்கள் இக் கொத்தணியால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தி வருகின்றது. குழுக்களின் வளர்ச்சியை காணுமிடத்து எட்டாத ஏணிப்படியாக உயர்துள்ளமையை காண முடிகின்றது.

பெண்களிடையே தற்துணிவும் தலைமைத்துவமும் ஓங்கி வளர்ந்துள்ளது. பெண் என்பவள் என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் வீறு நடைபோடுவதை காண முடிகின்றது.

நன்றி

## ➢ **திருமதி சு.தனேஸ்வரி** அவர்களின் பின்னூட்டல்

(ஊற்றருவி கொத்தணி – கலைமகள் குழு)

ஊற்றுப்புலம் என்னும் பின் தங்கிய மிகவும் வறுமை வாய்ந்த கிராமத்தில் வாழ்ந்து வருகின்றேன். நான் 2001ம் ஆண்டு காலப்பகுதியில் கலைமகள் என்னும் சுயசேமிப்பு குழுவில் இணைந்தேன். இதன்பின்னர் நான் கொத்தனி செயலாளராகவும் செயற்பட்டேன். இதன் காரணத்தால் நான் சம்மேளனம் சென்று மாதமொரு கூட்டத்தில் சமூகமளித்து அங்கு நடைபெறும் விடயங்களை எமது குழுக்களை உள்ளடக்கிய கொத்தனிக்கு பரிந்துரை கூறுவேன். இவ்வாறு 4 குழுவாக இருந்த குழு தற்போது 10 குழுவாக உருவாக்கி கொத்தனியையும் மாதாந்தம் நடாத்தி வருகின்றோம். 5 கொத்தனியாக இருந்தது தற்போது 8 கொத்தனியாக உருவாக்கப்பட்டுள்ளது. இன்றும் புதிய குழுக்களை உருவாக்கிக்கொண்டிருகின்றோம்.

சிறு துளி பெரு வெள்ளம் போல் எமது சிறுகுழு உறுப்பினர்கள் கரைச்சி,கண்டாவளை,பச்சிலைப்பள்ளி,பூநகரி ஆகிய இடங்களில் புதிய குழுக்களை உருவாக்கி வருகின்றோம்.

பெண்கள் சுயமாக சேமித்து சுய கௌரவத்துடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ வழி காட்டிக் கொள்வதுதான் மகாசக்தி சம்மேளனம் பெண்களை வலுப்படுத்தி பலசாளிகளாகவும் துணிவுள்ள பெண்களாகவும் வாழ வழிவகுக்கின்றது. அநேகமான பெண்கள் அடுப்பங்கரையில் அடங்கிக் கிடந்தவர்கள் ஆர்வத்துடன் சுயகுழுவிற்கு சேமிப்பை செய்வார்கள். வீதியில் சமுக நலன் கருதி சிறுவர்,பெண்களுக்காக குரல் கொடுப்பார்கள் இப்படிப்பட்ட துணிவையும் பலத்தையும் மகாசக்தி சம்மேளனம் உருவாக்கியுள்ளது.

சட்டங்கள் சொல்வதும் திட்டங்கள் செய்வதும் இப் பாரினிலே பெண்கள் தான் சமூகத்தில் பொருளாளதாரத்திலும் அரசியலில் பெண்கள் தபன் தலை நிமிர்ந்து ஆணுக்கு நிகராக முன் வருகின்றனர். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று பாரதியார் கூறியது மலையேறி விட்டது. பால்நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி சமூகத்தை மாற்றக் கூடிய சக்தியை இவ் மகாசக்தி பெண்கள் செயற்படுத்திக் கொண்டு வருகின்றனர்.

இவ் சம்மேளனத்தின் வளர்ச்சிக்காக பல பயிற்சிகளை இப் பெண்கள் பெற்றுள்ளனர் அத்துடன் உதவி,உணவு,உறையும் ஆற்றுப்படுத்தல் ஆகிய உதவிகளை முன் நின்று செய்யும் தற்துணிவை மகாசக்தி சம்மேளனத்தில் இணைந்த அனைத்து உறுப்பினரின் பணிகள் மகத்தானது. இதே போல் இன்றும் மறைமுகமாக இருக்கும் பெண்கள் துணிவுடன் மகாசக்தி குழுகளில் இணைந்யுங்கள் நல்லதை செய்யுங்கள் நன்மையை பெறுங்கள்.

நன்றி

## நன்றி நவிலல்............

கிளிநொசி மாவட்டத்தில் இயங்கி வரும் **மகாசக்தி மகளிர் சம்மேளனமானது** கடந்த 2002ம் ஆண்டு ஆரம்பமாகி 20 வருடகாலமாக வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பெண்கள், பெண்தலைமைத்துவ குடும்பங்கள்,நலிவுற்ற பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளி பெண்கள் என இணைந்து 223 சுய சேமிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு சமூக,பொருளாதார,அரசியல் ரீதியாக பெண்களை வலுப்படுத்தி சுயமுயற்சியில் பெண்களை சொந்தக் காலில் நிற்க வைத்ததுடன் கொத்தணிகளை அமைத்து அதனூடாக மகாசக்தி மகளிர் சம்மேளனத்தினை உருவாக்கியுள்ளனர்.

இதனை உருவாக்குவதற்காக உழைத்த அனைத்து சுய உதவிக்குழுக்களிலுள்ள அங்கத்தவர்களுக்கும்,கொத்தணி பிரதிநிதிகளுக்கும் மகாசக்தி நிர்வாகத்தினருக்கும் எமது இணையம் சார்பாக பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதுடன், மகாசக்தி நிறுவனத்தின் நிதியுதவியாளர்களான KHN, SLCDF ஆகிய நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

மற்றும் “**மாதமொரு மகுடம்**” சஞ்சிகை வெளியீட்டிற்கு நிதியுதவியை வழங்கிய காவேரிகலா மன்றத்திற்கு இணையம் சார்பாக எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இவ் சஞ்சிகை வெளியீட்டிற்கு ஒத்துழைப்பு நல்கியதுடன் , ஆசிச் செய்தியையும் வழங்கிய அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவரான கௌரவ திரு. வண. துரைச்சாமி சிவஞானம் ஜோசுவா அவர்களிற்கும், இவ் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வினை சிறந்த முறையில் ஒழுங்கமைத்து வடிவமைத்து செயல்படுத்தி செலவுகளிற்கான அனுமதியினை வழங்கியமைக்காக இணையத்தின் பொருளாளரான கௌரவ திரு. சுந்தரலிங்கம் செல்வகுமார் அவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு மேலும் எமது செயற்பாடுகளிற்கு நிதி,ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கிவரும் இணையத்தின் அங்கத்துவ நிறுவன பணியாளர்கள், திணைக்கள பணியாளர்கள் அனைவருக்கும் அகமகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அனைத்து தகவல்களை எமக்கு வழங்கியுதவிய மகாசக்தி மகளிர் சம்மேளனத்தின் நிர்வாக உத்தியோகத்தருக்கும், தொழில்நுட்ப உதவி மற்றும் கருத்தியல் ஆதரவுகள் வழங்கிய அனைவருக்கும் இணையம் சார்பாக மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் மேலும் எமது இணையத்தின் வளர்ச்சிக்காக சிறப்பான ஆதரவினை வழங்குவீர்களென நம்புகின்றோம்.

நன்றி

செல்வி. வாசுகி வல்லிபுரம்,<br>
செயலாளர்,<br>
அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,<br>
கிளிநொச்சி.



# நன்றி